தினகரன் (12.08.2025)

## டிஎன்பிஎல் சமுதாய பணி திட்டத்தில்

# 34 பள்ளி குழந்தைகளுக்கு இலவச கல்விக்கான ஆணை



▶ காகித ஆலை கல்வி நிறுவனத்தில் இலவச கல்வி பயிலும் 34 குழந்தைகளுக்கு சீருடைகளை, நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். அருகில் பள்ளி செயலாளர் மற்றும் தாளாளர் செல்வராஜ், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார்.

வேலாயுதம்பாளையம், ஆக.12: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம் மற்றும் சமுதாய நலப்பணித் திட்டத்தின்கீழ் டிஎன்பிஎல் பள்ளியில் படிக்கும் பின் தங்கிய 34 குழந்தைகளுக்கு இலவச கல்விக்கான ஆணை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாயப்பணிகளில் ஒரு பகுதியாக ஆண்டுதோறும், டிஎன்பிஎல் ஆலை சார்பில் பேரூராட்சிக்குட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு டிஎன்பிஎல் பள்ளியில் படிக்க இலவசக்கல்வி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த 34 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் 2025-2026-ஆம் கல்வி ஆண்டில் எல்கேஜி முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர். 34 குழந்தைகளுக்கும் சீருடைகளை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளி செயலாளர் மற்றும் தாளாளர் செல்வராஜ், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார்,ஒருங்கிணைப்பாளர் சக்திவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிக்கட்டணம், சீருடைகள், காலணி மற்றும் பேருந்து கட்டணம் முழுவதும் வழங்கப்படுகின்றன. அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மேற்படி அக்குழந்தைகளுக்கு பள்ளிச்சீருடைகள் வழங்கப்பட்டது.2007 -2008ம் ஆண்டு முதல் துவங்கி நடைபெற்று வரும் இந்த இலவசக்கல்வித் திட்டத்தின் மூலம் இது வரை ஏராளான குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் சுமார் ரூ.16 லட்சம் செலவிடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தினமணி (12.08.2025)**

# டிஎன்பிஎல் பள்ளியில் இலவசக் கல்வி பயில தேர்வான மாணவ, மாணவிகளுக்கு கடிதம்



புகளூர் காகித ஆலை பள்ளியில் இலவச கல்வி பயில தேர்வான மாணவ, மாணவிகளுடன் ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், பள்ளியின் தாளாளர் ஜி.செல்வராஜ், ஆலையின் முதன்மை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் உள்ளிட்டோர்.

கரூர், ஆக.11: கரூர் மாவட்டம், புகளூர் காகித ஆலை பள்ளியில் இலவசக் கல்வி பயில தேர்வான மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கை கடிதம் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

புகளூர் டிஎன்பிஎல் ஆலையின் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் டிஎன்பிஎல் பேரூராட்சிக்குள்பட்ட ஓவாக் கல்மேடு கிராமத்தைச் சேர்ந்த ஏழை குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் டிஎன்பிஎல் பள்ளியில் இலவசமாக கல்வி வழங்கப்பட்டு வருகிறது. நிகழ் கல்வி ஆண்டுக்கு தேர்வான 34 பேருக்கு சீருடை மற்றும் பள்ளியில் பயில சேர்க்கை கடிதம் வழங்கும் நிகழ்ச்சி பள்ளியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆலையின் பொது மேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன் தலைமை வகித்து, பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடைகள் மற்றும் கடிதத்தை வழங்கினார். இதில் பள்ளியின் தாளாளர் ஜி.செல்வராஜ், ஆலையின் முதன்மை மேலாளர்(மனிதவளம்) கே.எஸ்.சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மாலை மலர்

**MAALAI MALAR**

திருச்சி 12-8-2025 (செவ்வாய்க்கிழமை)

TRICHY 12-8-2025 (TUESDAY)




புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் இலவசக் கல்வி பயில்வதற்கான ஆவண கடிதம் மற்றும் சீருடைகளை காகித நிறுவன பொது மேலாளர்( மனித வளம் )கலைச்செல்வன் வழங்கிய போது எடுத்த படம். அருகில் டி.என்.பி.எல். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் செயலாளரும், தாளாளருமான செல்வராஜ், காகித நிறுவன முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

### புகளூர் காகித ஆலை நிறுவனத்தின் சார்பில்

## இலவசக் கல்வி பயில்வதற்கான ஆவண கடிதம், சீருடைகள் வழங்கல்

வேலாயுதம்பாளையம், ஆக.12—

கரூர் மாவட்டம் புகளூர் காவிரிபுரம் தமிழ்நாடு செய்தித்தான் காகித நிறுவனத்தின் சமுதாயப்பணிகளில் ஒரு பகுதியாக. ஆண்டு தோறும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை பேரூராட்சிக்கு உட்பட்ட ஓனவாக்கல்மேடு கிராமத்தை சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு டி.என்.பி.எல். பள்ளியில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. 34 குழந்தைகள் இத்திட்ட த்தின் மூலம் 2025—2026—ஆம் கல்வி ஆண்டில் எல்.கே.ஜி. முதல் 12—ம் வகுப்பு வரை இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர். இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிக்கட்டணம். பள்ளிச்சீருடைகள். காலணி மற்றும் பேருந்து கட்டணம் முழுவதும் டி.என்.பி.எல். நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்றன. அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்த குழந்தைகளுக்கு பள்ளிச்சீருடைகள் வழங்கப்பட்டது.

2007— 2008 ஆம் ஆண்டு முதல் தொட்ங்கி நடைபெற்று வரும் இந்த இலவசக்கல்வித் திட்டத்தின் மூலம் இதுவரை 57 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக ஆண்டு தோறும் சுமார் ரூ.16. லட்சம் செலவிடப்பட்டு வருகிறது. 34 குழந்தைகளுக்கு பள்ளிச்சீருடைகளை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். அப்போது டிஎன்பிஎல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி செயலாளர் மற்றும் தாளாளர் செல்வராஜ். முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

தினமலர் (13.08.2025)

# குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கும் விழா

**வேலாயுதம்பாளையம், ஆக. 13–**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை சார்பில் ஆண்டுதோறும்,ஓனவாக்கல்மேடு கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு டிஎன்பிஎல் பதின்ம பள்ளியில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. 34 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் 2025–26ம் ஆண்டில் எல்கேஜி முதல் பிளஸ் 2 வரை இலவச பள்ளிக்கல்வி பயின்று வருகின்றனர்.

இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு பள்ளிக்கட்டணம், சீருடைகள். காலணி மற்றும் பஸ் கட்டணம் முழுவதும் காகித ஆலை மூலம் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

அதன்படி,34 குழந்தைகளுக்குஇலவச கல்வி பயில்வதற்கான ஆவண கடிதம் மற்றும் பள்ளி சீருடைகளை காகித ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். இதில் டிஎன்பிஎல்மேல்நிலைப்பள்ளி செயலாளர்செல்வராஜ், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். இத்திட்டத்திற்காக ஆண்டு தோறும் சுமார் ரூ.16 லட்சம் செலவிடப்படுகிறது.



காகித ஆலை மூலம் டிஎன்பிஎல் பதின்ம பள்ளியில் இலவச கல்வி பயிலும் குழந்தைகளுக்கு அதற்கான ஆவண கடிதம் மற்றும் பள்ளி சீருடைகளை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார். அருகில், டிஎன்பிஎல் மேல்நிலைப்பள்ளி செயலாளர்செல்வராஜ், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உட்பட பலர்.

## தினத்தந்தி (13.08.2025)



டி.என்.பி.எல். பள்ளியில்

# 34 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி

நொய்யல், ஆக.13-

கரூர் மாவட்டம் புகழூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாயப்பணிகளில் ஒரு பகுதியாக ஆண்டுதோறும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை பேரூராட்சிக்கு உட்பட்ட ஒனவாக்கல்மேடு கிராமத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குழந்தைகளுக்கு டி.என்.பி.எல். பள்ளியில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. ஒனவாக்கல்மேடு கிராமத்தைச் சேர்ந்த 34 மாணவ-மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் 2025-2026-ம் கல்வி ஆண்டில் எல்.கே.ஜி. முதல் 12-ம் வகுப்பு வரை இலவச கல்வி பயின்று வருகின்றனர். அவர்களுக்கு கல்வி பயில்வதற்கான ஆணை மற்றும் பள்ளிச்சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு கல்வி பயில்வதற்கான ஆணை மற்றும் பள்ளிச்சீருடைகளை வழங்கினார். அப்போது டி.என்.பி.எல். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி செயலாளர் மற்றும் தாளாளர் செல்வராஜ், முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உள்பட பலர் உடனிருந்தனர்.